### ஒன்றிய அரசுக்குச் செலுத்தப்படும் வரிகளின் மூலம் ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படும் வரித் தொகுப்பில் இருந்து – மாநிலங்களுக்கு

# 50 சதவிகித நிதிப் பகிர்வும் - தமிழ்நாட்டிற்குரிய நிதிப் பகிர்வும் உறுதி செய்யப்பட வேண்டும்!

## சட்டப் பேரவையில் – நிதி அமைச்சரின் அரசினர் தீர்மானம் மீதான விவாதத்தில் – தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 9-**

**ஒன்றிய அரசுக்கு செலுத்தப்படும் வரிகளின் மூலம் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசால் பகிர்ந்து அளிக்கப்படக்கூடிய வரித் தொகுப்பில் இருந்து மாநிலங்களுக்கு 50 சதவிகிதம் நிதிப் பகிர்வு உறுதி செய்யப்படு வதுடன், அதில் தமிழ்நாட்டிற்கு உரிய நிதிப்பகிர்வும் உறுதி செய்யப்பட வேண்டும்" என்று சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் பேசுகையில் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு தொடர்பாக அரசு கொண்டு வந்த தீர்மானத்தின் மீதான விவாதத்தில் முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

இந்த அவையில் இன்று முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய மிக முக்கியமான இந்த தீர்மானத்தின் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள திருத்தத்தினை முன்மொழிந்து கழகத்தின் சார்பில் கருத்துக்களை இந்த அவையிலே வழங்குவதற்கு வாய்ப்பினை வழங்கி இருக்கக்கூடிய கழகத்தினுடைய தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவரான தங்களுக்கும், இந்த பேரவைக்கு ஆறாவது முறையாக என்னை அனுப்பி வைத்து மக்கள் பணியாற்ற வாய்ப்பளித்திருக்கக்கூடிய திருச்சுழி தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் நான் முதற்கண் என்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நினைவு நாள். மாநில சுயாட்சிக் கொள்கைகளுக்காகவும், மாநில உரிமைகளுக்காகவும் தன்னுடைய வாழ்நாளெல்லாம் போராடிய அந்த மகத்தான தலைவர் துயிலுமிடம் நோக்கி நான் தொழுது வணங்குகிறேன்.

அரசின் சார்பாக கொண்டு வரப்பட்டுள்ள இந்த தீர்மானத்தை கழகத்தினுடைய சார்பில் வரவேற்கக்கூடிய அதே வேளையில் மிக முக்கியமானது ஒரு திருத்தத்தையும் நான் முன்மொழிய கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நிதி யமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த தீர்மானத்தின், நாலாவது பத்தியில் முதல் தீர்மானம் கீழ்க்கண்டவாறு அமைந்திட வேண்டும் என்ற திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

**தமிழ்நாட்டிற்குரிய நிதிப்பகிர்வை உறுதி செய்வீர்!**

இந்திய அரசியலமைப்பின் நிதிசார் கூட்டாட்சிக் கொள்கைகள் சமத்துவம் மற்றும் நியாயம் ஆகியவற்றுக்கு இணங்க, ஒன்றிய அரசுக்கு செலுத்தப்படும் வரிகளின் மூலம் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசால் பகிர்ந்து அளிக்கப்படக்கூடிய வரித் தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கு 50% நிதிப்பகிர்வினையும் அதனை ஒட்டி தமிழ்நாடு மாநிலத்திற்கு உரிய நிதிப்பகிர்வினையும் உறுதி செய்ய வேண்டும் என்கின்ற இந்த திருத்தத்தை நான் இங்கே முன்மொழிய கடமைப்பட்டிருக்கிறேன்.


காரணம் இந்த அவையிலே கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய தீர்மானம் அதனுடைய வடிவில் பொதுப்படையாக ஜெனரிக்காக இருக்கிறது. எனவே நான் 16 ஆவது நிதிக்குழுவின் முன்பு நம்முடைய அரசின் சார்பாக ஏற்கனவே தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்களின் மற்றும் அரசினுடைய நிலைப்பாட்டின் அடிப்படையில், நிதிப்பகிர்வு என்பது *50 சதவீதமாக* மாநிலங்களுக்கு இருக்க வேண்டும் என்றும், அது குறிப்பாகவும், வெளிப்படையாகவும் ஸ்பெசிபிக் அண்ட் எக்ஸ்பிளிசிட்டாகவும் இருக்க வேண்டும் என்ற வகையில் நான் இந்த திருத்தத்தை முன்மொழிந்து அந்த திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த பேரவையிலே கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்த தீர்மானம், தமிழ்நாட்டிற்கான நிதி எவ்வளவு கிடைக்கிறது, அல்லது எவ்வளவு கிடைக்கவில்லை என்பதை குறித்த விவாதம் மட்டுமல்ல. மாறாக இது இந்திய கூட்டாட்சி தத்துவத்தினுடைய எதிர்காலத்தை பற்றியது ஒரு விவாதத்திற்கான தீர்மானமாக வும் அமைந்திருக்கிறது. நாம் இழந்திருக்கக்கூடிய உரிமைகள் குறித்த விவாதமாக இந்த விவாதம் அமைந்திருக்கிறது.

**இந்திய கூட்டாட்சியின் வலிமை!**

மாநில அரசினுடைய உரிமைகளுக்கும், ஒன்றிய அரசுக்கும் இடையில் இருக்கக்கூடிய இந்த பொறுப்புகளுக்குமான இடையேயான சமநிலை குறித்த விவாதமாகவே நான் இந்த விவாதத்தை காண்கிறேன். இந்திய கூட்டாட்சி யினுடைய வலிமை எதில் இருக்கிறது என்ற கேள்வி இன்றைக்கு வந்திருக்கிறது. அந்த கேள்விக்கான விடை மாநிலங்களினுடைய வலிமையில் தான் அது இருக்கிறது என்பது தான் அதற்கான உரிய பதிலாக இருக்க முடியும்.

நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அதை குறித்து மிக அருமையாக சொன்னார்கள். ஒன்றிய அரசினுடைய வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றினுடைய தனித்தனி வலிமையையும் கூட்டியதால் ஏற்பட்டிருக்கக்கூடிய வலிமையே தவிர, மாநிலங்களுக்கு



அல்லது இருக்கக்கூடிய இந்த வலிமையினுடைய ஒட்டுமொத்த வலிமையே தவிர, அது ஒன்றிய அரசிற்கான தனிப்பட்ட வலிமை அல்ல என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மாநில அதிகாரங்கள் ஒன்றிய அரசு இன்றைக்கு அவர்கள் குவித்துக் கொள்வதால், மாநிலங்கள் இன்றைக்கு பலவீனமடையுமே தவிர ஒன்றிய அரசிற்கு அதனால் புதிய வலிவு ஏதும் ஏற்பட்டு விடாது என்று அண்ணா அவர்கள் அன்றைக்கு எடுத்துச் சொன்னதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதை ஒட்டித்தான் கடந்த காலங்களிலும், நிதி ஆயோக் கூட்டங்களிலே நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், தமிழ்நாட்டினுடைய இந்த கருத்தை மிக வலிமையாக அங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இன்றைக்கு சூழ்நிலை என்ன? மாநிலங்களுக்கான இருக்கக்கூடிய இந்த வருவாய் ஆதாரங்கள் குறைகிறது. சட்டம் இயற்றப்படக்கூடிய நம்முடைய கடமைகள் இன்றைக்கு கட்டுப்படுத்தப்படுகிறது, நம்முடைய அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படுகிறது. அதே வேளையில் என்ன சூழ்நிலை? மாநிலத்திலே இருக்கக்கூடிய மக்களுடைய எதிர்பார்ப்பு மாநில அரசை நோக்கி இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது, அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்த முரண்பாட்டைத்தான் இந்த தீர்மானத்திலே நாம் இன்றைக்கு விவாதிக்க வேண்டி இருக்கிறது. சுருக்கமாக சொன்னால், செலவு பொறுப்பு என்பது மாநிலங்களிடத்திலே இருக்கிறது. ஆனால் வருவாய் ஆதாரங்கள் யாரிடத்திலே இருக்கிறது என்று சொன்னால் அது ஒன்றிய அரசிடத்திலே இருக்கிறது. இந்த முரண்பாட்டை தீர்க்காமல் தமிழ்நாட்டினுடைய எதிர்கால வளர்ச்சியை நாம் தீர்மானிக்க முடியாது. எனவே தான் இந்த விவாதம் இன்றைக்கு மிக முக்கியமான விவாதமாக இருக்கிறது.

**உற்பத்தித் துறையில் முதன்மை மாநிலம்!**

நாம் அனைவரும் நன்றாக அறிவோம், தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலே மிகப்பெரிய, இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரம், தி செகண்ட் லார்ஜஸ்ட் எகானமி இன் த ஸ்டேட் என்று நீங்கள், தி கண்ட்ரி என்று நீங்கள் எடுத்துக் கொண்டால் அது தமிழ்நாட்டைச் சொல்லக்கூடிய அளவிற்கு நாம் வளர்ந்திருக்கக்கூடிய ஒரு மாநிலமாக இருக்கிறோம். இன்றைக்கு இந்தியாவினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில், ஜிஎஸ்டிபியில், 9 சதவீதமான பங்களிப்பை நாம் தருகிறோம். மொத்த ஏற்றுமதியில் 11 சதவீதமான பங்களிப்பை நாம் தந்திருக்கிறோம். உற்பத்தி துறையிலே நாம் முதன்மை மாநிலமாக இருக்கிறோம். தொழிற்சாலைகளிலே 11 சதவீதம் நம்மிடத்திலே இருக்கிறது. பெண் தொழிலாளர்களுடைய பங்களிப்பில் நாம் முதன்மையாக இருக்கிறோம். நம்முடைய இயற்கை வளங்கள், குறிப்பாக மனித வளம், கல்வியறிவு இந்த வளர்ச்சிக்கு அடிப்படை காரணங்களாக இருந்திருக்கிறது. இந்த வளர்ச்சி தான் ஒட்டுமொத்த இந்தியாவினுடைய பொருளாதாரத்திற்கு தூணாக தமிழ்நாடு இன்றைக்கு வந்திருக்கிறது.

அதனடிப்படையில், நாம் இன்றைக்கு பெற்றிருக்கக்கூடிய உண்மையான பொருளாதார வளர்ச்சி என்பது 11.19 சதவீதமாக வந்திருக்கிறது என்று சொன்னால், நாம் கட்டிக்காத்து வளர்த்திருக்கக்கூடிய இந்த வளர்ச்சிக்கு நாம் அளித்திருக்கக்கூடிய மிகப்பெரிய பங்களிப்பு தனிநபர் வருமானங்கள் இன்றைக்கு 3.63 லட்சமாக கூடியிருக்கலாம். ஆனால், நம்முடைய மாநிலத்திலே இன்றைக்கு தொடர்ச்சியாக நாம் கடைபிடித்து வரக்கூடிய நல்ல நிதி நிர்வாகங்களை கணக்கிலே எடுத்துக் கொள்ளாமல், நம்முடைய நிதி ஒழுங்கிற்கு, பிஸ்கல் டிசிப்ளினுக்கு உரிய முக்கியத்துவம் தராமல், இன்றைக்கு நிதிப் பகிர்விலே நம்முடைய மாநிலம் தொடர்ந்து இன்றைக்கு புறக்கணிக்கப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது.

**வருவாய் அதிகாரங்கள் ஒன்றிய அரசிடம்!**

நான் பலமுறை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். ஒன்றிய அரசு இன்றைக்கு நாம் கொடுக்கக்கூடிய ஒவ்வொரு ரூபாய்க்கும் 29 பைசா நமக்கு வருகிறது. இதே இது உத்தரபிரதேசத்தை நீங்கள் எடுத்துக் கொண்டால், 2 ரூபாய் 73 பைசா. பீகாருக்கு 7 ரூபாய் 6 பைசா. நான் மற்ற மாநிலங்கள் குறை சொல்லவில்லை. நீங்கள் கொடுங்கள், எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கிறது நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், தமிழ்நாட்டிற்கு இந்த புறக்கணிப்பு ஏன் என்பது தான் தொடர்ச்சியாக என்னுடைய கேள்வியாக இருக்கிறது.

குறிப்பாக ஜிஎஸ்டி, ஜிஎஸ்டி வந்ததற்குப் பிறகு நம்முடைய பிஸ்கல் அட்டானமி என்பது முழுமையாக இல்லை. ஒரு பொருளுக்கு எந்த பொருளுக்கு எந்த அளவிலே நாம் வரி விதிக்கலாம் என்கின்ற உரிமையை நாம் இழந்திருக்கிறோம். ஒட்டுமொத்தமான வருவாய் அதிகாரங்கள் இன்றைக்கு ஒன்றிய அரசில் குவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டிலே கூட ரேட், அந்த ரேட் ரேஷனலைசேஷன் ஃபார் ஜிஎஸ்டி வருகிற போது ஜிஎஸ்டி கவுன்சிலில் நாங்கள் அதைத்தான் சொன்னோம். நீங்கள் இப்போது விகிதங்களை குறைப்பதற்காக பார்க்கிறீர்கள். ஆனால் நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய பாயன்சி வரவில்லை, ஒரே நிமிஷம், பாயன்சி வரவில்லை, வராது. அதன் காரணமாக மாநிலங்களுக்கு வரவேண்டிய வரி வருவாய்கள் குறையும் என்று நாங்கள் அன்றைக்கு எதிர்பார்த்துச் சொன்னோம். இன்றைக்கு அதுதான் நடைமுறையிலே வந்திருக்கிறது.

**மாநிலங்களுடைய சுமை!**

எனவேதான் இந்த மாநில, ஒன்றிய அரசினுடைய நிதியுதவித் திட்டங்கள், அதையெடுத்துக் கொண்டு பார்த்தீர்கள் என்று சொன்னால், ஒரு புறம் ஒன்றிய அரசினுடைய பங்களிப்போடு நடக்கக்கூடிய இந்த திட்டங்களில், ஒன்றிய அரசின் திட்டங்களில் மாநில அரசினுடைய நிதி பங்களிப்பு உயர்ந்து கொண்டே போகிறது. ஒரு காலத்திலே 25 சதவீதம் இருந்தது. இப்போது 40 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே நமக்கு வரவேண்டிய வருவாய் பகிர்விலும் குறைவு, இன்னொரு வகையிலே ஒன்றிய அரசிற்கு நாம் கொடுத்திருக்கக் கூடிய நிதிப் பங்களிப்பு என்பது மாநிலங்களுடைய சுமையை இன்றைக்கு உயர்த்திக் கொண்டே இருக்கிறது.

இதுல இன்னொரு பெரிய முக்கியமான விஷயம், இந்த வரித் தொகுப்பிலிருந்து நமக்கு வருவதை குறைக்கக்கூடிய அதே வேளையில், செஸ் அண்ட் சர்சார்ஜஸ் என்கின்ற வகையிலே, ஒட்டுமொத்த வரித் தொகுப்பிலிருந்து வரக்கூடிய இந்த பகிர்வுக்குத் தாண்டி, அதற்கு வெளியே இன்றைக்கு இந்த நிதிக் குவியலை ஒன்றிய அரசு தன்னிடத்திலே கொண்டிருக்கிறது. அதற்கான காம்பன்சேஷன் என்ன என்பதற்கு இன்றைக்கு வரை ஒன்றிய அரசு நம்மிடத்திலே சரியான முறையிலே விளக்கங்களைக் கொடுக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தான் கடந்த ஆண்டும் நாம் நிதிக்குழுவிலே பேசியிருக்கிறோம், ஃபைனான்ஸ் கமிஷன்ல சொல்லியிருக்கிறோம். 9ஆவது நிதிக்குழுவிலே 7.9 சதவீதமாக இருந்த நம்முடைய வரிப் பகிர்வு நமக்கு முடிச்சிட்டேன் ஜஸ்ட் கன்குளூட் பண்றேன். 9ஆவது நிதிக்குழுவிலே நமக்கு 7.93 சதவீதமாக இருந்த இந்த நிதிப் பங்களிப்பு என்பது, 15ஆவது நிதிக்குழு காலத்திலே 4.079 சதவீதமாக குறைகிறது. 9 லிருந்து 4 க்கு வந்துட்டோம்.

16 ஆவது நிதிக்குழுவிலே நம்முடைய தமிழ்நாட்டினுடைய வாதங்களை எவ்வளவு சிறப்பாக நாம் வைத்திருந்தாலும் கூட, நமக்கு கிடைத்திருக்கக்கூடிய உயர்வு என்பதை பார்த்தீங்கன்னா ரொம்ப மீகர், மிக மிக குறைவு. 0.018 பர்சன்டேஜ், இந்த சதவீத புள்ளி, புள்ளி தான் நமக்கான உயர்வு கிடைத்திருக்கிறது. கேரளாவுக்கு அதிகமாக கிடைத்திருக்கிறது, கர்நாடகாவுக்கு அதிகமாக கிடைத்திருக்கிறது, தவறில்லை அவர்களுக்கு கொடுங்கள். ஆனால், நாம் இன்றைக்கு கிடைத்திருக்கக்கூடிய அளவுகோல்கள் குறிப்பாக நான் சொல்ல வேண்டும் என்று சொன்னால் நம்முடைய நிதி ஒழுங்கு, நம்முடைய வரிவசூல் திறன், நம்முடைய மனிதவள மேம்பாடு, நம்முடைய நகரமயமாக்கக் கூடிய திட்டங்கள், இன்னும் சொல்ல வேண்டும் என்றால் நாம் சந்திக்கக் கூடிய ஏஜிங் ப்ராப்ளம், பென்ஷன் போன்றிருக்கக்கூடிய பல்வேறு தமிழ்நாட்டிற்கென்று பிரத்யேகமாக இருக்கக்கூடிய பிரச்சினைகள் இது எதையுமே இன்றைக்கு நிதிக்குழு கணக்கிலே எடுத்துக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

எனவே இவற்றுக்கெல்லாம் ஒரு நல்ல தீர்வு காணக்கூடிய வகையிலே இந்த தீர்மானத்தை நாம் வரவேற்க வேண்டிய அதே காலகட்டத்தில், 50 சதவீதம் இன்றைக்கு மாநிலங்களுக்கு கொடுக்கக்கூடிய அந்த வரிப்பகிர்வில் 50 சதவீதமாக அது குறிப்பிடப்பட வேண்டும். ஏனென்றால் இத்தனைக்கு பிறகு மீண்டும் 41 சதவீதமாகத் தான் அது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனவே மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய அந்த நிதிப்பகிர்வில் 50 சதவீதமாக அது குறிப்பிடப்பட வேண்டும். அதில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கினை தர வேண்டும் என்கின்ற அந்த திருத்தத்தையும் நான் முன்மொழிந்து, இதை உள்ளடக்கி இந்த தீர்மானத்தினுடைய உள்ளார்ந்த கருத்துக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்த கருத்துக்களோடு, இந்த தீர்மானத்தின் கருத்துக் களோடு ஒன்றிணைந்து அதை வரவேற்று இந்த அளவில் அமைகிறேன்,

இவ்வாறு சட்டப் பேரவையில் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அப்பம்பட்டியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்டக் கழக இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், துணை சேர்மன் ஜெயபாலன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு காட்பாடி சித்தூர் பஸ் நிலையத்தில் உள்ள அண்ணா சிலைக்கு கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு தெற்கு பகுதிச் செயலாளரும், வேலூர் மாநகராட்சி துணை மேயருமான எம்.சுனில்குமார் தலைமை தாங்கி மலர் தூவி மரியாதை செலுத்தினார். காட்பாடி வடக்கு பகுதிச் செயலாளர் வன்னியராஜா, காட்பாடி ஒன்றியச் செயலாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் துரைசிங்காரம், மாவட்ட பொருளாளர் நரசிம்மன், பொதுக்குழு உறுப்பினர் தயாநிதி, மாநகர துணைச் செயலாளர் தேவநேசன், வட்ட செயலாளர்கள் சசிகுமார், சம்பந்தம், அரிகிருஷ்னனண், ராஜி, மாநகராட்சி கவுன்சிலர்கள் ரஜினி, டீடா சரவணன், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் டீக்காராமன் உள்பட பலர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். அதைத் தொடர்ந்து காட்பாடி தெற்கு பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.